**<u>சார்பு நீதிமன்றம், போளூர்</u>**

எம்.சி.ஓ.பி. எண்: 46/2024

DEPOSITION OF WITNESS: R.W.1

| | |
|---|---|
| பெயர் | குமரேசன் |
| தந்தை பெயர் | வையாபுரி |
| வயது | 23 |
| கிராமம் | மேட்டுர் |
| வட்டம் | மேட்டுர் |
| தொழில் | தட்டச்சர், |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 13th day of March 2026

**<u>முதல் விசாரணை</u>**

இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய நீதிமன்றத்தில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலர், சேலம் (கிழக்கு) அவர்களுக்கு சம்மன் வந்தது. அந்த சம்மனை அவர் பெற்றுக்கொண்டு அவர் சார்பில் இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். அந்த அனுமதி கடிதம் அசல் **எ.ம.சா.ஆ.1** ஆகவும் திரு. பாண்டியன் (எ) ராஜபாண்டியன், த/பெ. கள்ளேரயன் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் வழங்கப்படவில்லை என்றும் அவருக்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், ஆத்தூரில் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது என வட்டார போக்குவரத்து அலுவலர் கொடுத்த 10.03.2026 ம் தேதியிட்ட கடிதம் அசல் **எ.ம.சா.ஆ.2** ஆகவும் பாண்டியன் (எ) ராஜபாண்டியன், ஓட்டுனர் உரிமம் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.01.2014 ம் தேதி பாண்டியன் (எ) ராஜபாண்டியனுக்கு சரக்கு வாகனம் மற்றும் கனரக வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. அவர் 04.02.2020 ம் தேதி தான் பொதுபணிவில்லை ( சரக்கு வாகனம்) ஓட்ட உரிமம் பெற்றுள்ளார். கனரக வாகனம் ஓட்ட 05.09.2020 ம் தேதி உரிமம் பெற்றுள்ளார்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வட்டார போக்குவரத்து அலுவலகம், சேலம் (கிழக்கு) அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். எ.ம.சா.ஆ.3 ல் பாண்டியன் (எ) ராஜபாண்டியனுக்கு 03.08.2012 ல் ஓட்டுனர் உரிமம் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உரிமமானது இருசக்கர வாகனம்

மற்றும் இலகுரக நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்காக கொடுக்கப்பட்டது ஆகும். எ.ம.சா.ஆ.3 வட்டார போக்குவரத்து அலுவலர், ஆத்தூர் அவர்களால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட எ.ம.சா.ஆ.3 ஓட்டுனர் உரிமம் வைத்து பாண்டியன் (எ) ராஜபாண்டியனுக்கு டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம் ஓட்ட உரிமம் உள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி.<br>போளூர். |